# தமிழ்ச் சிட்டு

## மக்களைச் சமம்-எனச் செய்வோம் !

பிறப்பினுல் மக்களை நால்வகை வருணமாய்ப்
   பிரிப்பதும், அவர்களை மேலும்
சிறப்பிலாப் பலநூறு சாதியாய்ப் பகுப்பதும்
   சிந்தித்துப் பார், தம்பி, இழிவே!
உறுப்புகள் எல்லாம் ஒன்றுபோல் உள்ளன!
   உணர்வதும் அறிவதும் பொதுவே!
மறுப்பிதற் குண்டோ? வேற்றுமை உண்டோ?
   மக்களைச் சமம்எனச் செய்வோம்!

இறையவன் என்றேர் உணர்வினைக் கொண்டே
   எத்தனைப் பிரிவுகள் மதங்கள்!
மறைவென்ன தம்பி! மறுப்பென்ன தம்பி!
   மதஙகளால் எத்தனைச் சண்டை?
நிறைவுற மக்களின் நலன்கள் கருதிடும்
   நிலைதான் அரசியல் என்றுல்,
குறைவறக் கட்சிகள் பற்பல வேண்டுமோ?
   கொள்கையென்(று) ஒன்றுபோ தாதோ?

மக்களைச் சுரண்டியே பிழைக்குமோர் கூட்டம்!
   மற்றவர் ஏழைகள் ஆமோ?
தக்கவா றெல்லா உடைமையும் பொதுவெனத்
   தகுதிசெய் தால்அது தீதோ?
மிக்கவே நலன்களை ஒருவனே நுகர்வதும்
   மிகுதியோர் சாவதும் நன்றே?
ஒக்கவே அனைவரும் உண்பதும் உடுப்பதும்
   உறைவதும் சமம் எனச் செய்வோம்!

ஆசிரியர்
பெருஞ்சித்திரனர்

குரல் : 21
இசை : 1

விலை :
உருபா : 1·00

# முத்து மொழிகள்!

- தரையோடு தரையாய் நசுக்கப்பட்டாலும், உண்மை மறுபடியும் எழுந்து நிற்கவே செய்யும். ஆண்டவனுடைய எல்லையில்லாக் காலம் அதற்கும் உண்டு. —பிரையண்ட்
- தூய்மையான பொய்யால் ஒரு நாளும் தொல்லை உண்டாவதில்லை.
  —சிட்னிசுமித்
- நாம் இறைவனிடம் எதை வேண்டுகிறோமோ அதையே இறைவன் நம்மிடம் வேண்டுகிறான். —செரிமி டெய்லர்
- மத முரட்டுப் போக்குக்கு மூளையில்லை, அதனால் சிந்திக்க முடியாது; அதற்கு உள்ளமுமில்லை, அதனால் உணர முடியாது.
  —ஓகானல்
- மாந்தனுடைய உயர்ந்த செய்திகள் அவன் அருகிலேயே உள்ளன; இன்னுஞ் சொன்னால் அவன் பாதங்களின் அடியிலேயே அவை அமைந்துள்ளன. —ஆட்டன் பெரியர்
- சாத்திரிகளைப் போல் மிக்க அறிவாளித்தனமாய் மத மூடக் கொள்கை பேசுவதைவிட, சான்றோர்களைப் போல் மதத் தொடர்பின்றி, மெய்ப்பொருளைப் பற்றிப் பேசுதலே சாலச் சிறந்ததாகும்.
  —செசுடர்டன்
- ஒவ்வொருவனும் பிழைசெய்யக் கூடியவனே: ஆனால் மூடனைத் தவிர வேறு யாரும் பிழையைத் தொடர்ந்து செய்ய மாட்டார்கள்.
- உயர்ந்த எண்ணங்களை உடையோர் எப்பொழுதும் தனித்தவராகவே இருப்பர்.
  —சர்பிலிப் சிட்னி
- தன்னந்தனியாய் நிற்பவனைவிட அதிக ஆற்றல் வாய்ந்தவன் உலகினில் இல்லை.
  —இப்சன்
- உடல் துன்பம், மனச்சான்றின் இரக்கவுணர்வு இவை இரண்டும் தவிர, பிற துன்பங்கள் எல்லாம் வெறுங்கற்பனைகளே! உண்மையானவை அல்ல.
  —ரூசோ
- கவனமாய் வடித்து எடுப்பின், தீமையிலும் நன்மை புலப்படலாம்.
  —சேக்சுபியர்.
- குளிர் மிகுதிதான்; கந்தை உடைதான்! ஆனால் என் ஒழுக்கம் எனக்குக் கதகதப்பைத் தருகிறது. டிரைடன்
- அறிவு கூட சந்தைக்கு வரும், அதை விலைக்கு வாங்கவும் முடியும், ஆனால் உணர்ச்சி—அன்பு—ஒரு நாளும் சந்தைக்கு வருவதில்லை;
  வே. ஆர். லவசு
- அறமே ஆற்றல் என்பதை நம்புவோமாக, அந்த நம்பிக்கையில் நாம் அறிந்த கடமையைச் செய்யத் துணிவோமாக.
  —ஆப்ரகாம் இலிங்கன்
- நமது உணர்ச்சியின் தன்மை அதன் பரப்பு ஆகிய இரண்டின் அளவே நமது ஒழுக்கமாகும். —சார்லி எலியட்.
- குற்றமான செயல் செய்யக் கூசவேண்டியது தேவையே! ஆனால் பிறர் குறை கூறுவாரோ என்று மிகுந்த எச்சரிக்கை அமைத்துக் கொள்பவன் அன்புடையவனாக இருக்கலாம்; ஆனால் உயர்ந்தோனாக மட்டும் இருக்க முடியாது
  —ப்ளூட்டார்க்

(தொகுப்பு: செல்வி, பெ. குறிஞ்சி, மூர்த்திக்குப்பம்.)

# தமிழ்ச்சிட்டு

கனித்தமிழ்
சிறுவர் கலைஇதழ்

இன்றைய பயிரே நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர் நாளைய உலகம்
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை!
என்றும் அழியாது இருப்பது புகழே!

குரல் : 21] (தி.பி-2021) மேழம்-விடை (மே) 90') [இசை-1

## ஒள்ளறிவும் காரறிவும்!

(முன்னிதழ்த் தொடர்ச்சி: 2)

மேலும், அறிவில்லாதவர்கள் தங்களின் அறியாமையால் தங்களுக்குத் தாங்களே ஏற்படுத்திக் கொள்ளும் துன்பம், அவர்களின் எதிரிகளாலும் செய்வதற்கு அரியதாக இருக்கும்; (843); அறியாமை என்று சொல்லப் பெறுவதற்கு முதல் அடையாளமான தன்மை என்னவென்றால், தாம் சிறந்த அறிவுடையவராக இருக்கிறோம் என்று எண்ணிக் கொள்ளும் செருக்குடைய எண்ணமே. (844); அறியாதவர்கள, பிறரிடம் வெளிப்படுத்த வேண்டாத மறைவான கமுக்கச் செய்திகளை வெளிப் படுத்தி விட்டு, அதனால் தங்களுக்குப் பெருத்த துன்பங்களை வருவித்துக் கொள்ளுவார்கள். (847); அவ்ர்கள் நல்லனவற்றைப் பிறர் ஏவினாலும் அவற்றிற்கு உடன்பட்டுச் செய்ய மாட்டார்கள்; தாங்களும் அவற்றைச் செய்ய வேண்டுவனவாகக் கருதிச் செய்யவும் மாட்டார்கள்; எனவே, அவர்களே அவர்களுக்கு இறுதிவரை ஒரு நோயாக இருந்து, துன்பப் பட்டுக் கொண்டே இருப்பார்கள். (848); அறிவில்லாதவர்களால் உண்மையைக் காண முடியாது; பிறர் கண்டு சொன்னாலும், அதை உணர

வெளியீட்டாளர், பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரனார்,
ஆசிரியர்: மா. பொழிலன்.
தென்மொழி மின் அச்சகம், சென்னை-600005. (தமிழகம்)

முடியாமல், தங்களுக்கு எந்த அளவில் அல்லது வடிவில் உண்மை தெரியுமோ, அந்த அளவையே அல்லது வடிவத்தையே முழு உண்மை என்று எண்ணிக் கொண்டு இருப்பார்கள். (849); அறிவற்றவர்களின் பகைவர்கள், இவர்களின் இயல்பான அஞ்சுதல் தன்மையினாலும், அதனால் இவர்களால் எந்தத் துன்பமும் உடனே வரும் வாய்ப்பின்மையாலும், இறுதிவரை மகிழ்வாகவே அச்சமின்றி இருப்பர்.

அறிவில்லாதவர்கள் தொடர்பு எப்பொழுதுமே கேடு தருவது. (797); அறிஞர்களைப் போற்றிப் புரந்து கொள்ள வேண்டும் என்னும் உணர்வு அறிவில்லாதவர்களிடம் இருப்பதில்லை. (976); அறிவற்றவர்கள் என்றும், எப்பொழுதும், யாருக்கும் பணிவாக நடந்து கொள்ளாமல், தங்களையே பெரியவர்களாக நினைத்து வியந்து கொள்வார்கள். (978); அறிவற்றவர்கள் எப்பொழுதும் செருக்குப் பிடித்தவர்களாகவே இருப்பர். (979); அறிவற்ற சிறுமைப் பண்பு கொண்டவர்கள், பிறருடைய குற்றங்களையே பெரிதாக எண்ணி, எல்லாரிடமும் அவற்றைக் கூறி மகிழ்வார்கள். (980).

இது வரை முன் பகுதிகளில் விளக்கப் பெற்ற கருத்துகளால், அறிவுள்ளவர்களின் தன்மைகளையும் அறிவற்றவர்களின் தன்மைகளையும் ஒருவாறு பொதுவாக அறிந்து கொள்கின்றோம்.

இனி, அறியாதவர்களின் தன்மைகள் வேறு, அறிந்தும் அந்த அறிவை நல்ல செயல்களான ஆக்கத்திற்குப் பயன்படுத்தாமல், பிறரை வஞ்சித்து ஏமாற்றுவதற்கும், அதால் ஊதியம் பெறுவதற்கும் பயன்படுத்தும் தன்மைகள் வேறு. அறிந்தவர்களின் தன்மை அறிவு; அறியாதவர்களின் தன்மை அறியாமை: ஆனால் அறிவுள்ளவர்கள் அவ் வறிவைத் தங்களின் தந்நல வேட்கையால், பிறரை வஞ்சித்து ஏமாற்றிப் பணம் பறிக்கும் தன்மையே காரறிவு என்பது.

பிறரை ஏய்க்கின்றவன், தான் நல்ல செயல்களையே செய்வது போல் தோன்றும்படி, அதனால் பிறர் தன்னை மதிக்கும்படி செய்து, தன் உள்நோக்கமாகிய பொருள் திரட்டும் தன்மையை நிறைவு படுத்திக் கொள்கிறான். இவனின் அறிவு அறிவுள்ளவர்களின் தன்மை போலவே இருக்கும். ஆனால் அவ்வறிவு தந்நலம் நிரம்பியதாகவே இருப்பதால் அதைக் காரறிவு என்பார் திருவள்ளுவர். எனவே காரறிவு என்பது அறிவுக்கும் அறியாமைக்கும் இடைப்பட்ட அறிவுப் போலியான ஒரு தன்மையாகும். அறிவுப் போலியே காரறிவு. இதைக் கண்டு கொள்வது கடினம். பலர் இதை அறிவென்றே மயங்கி ஆதரவும் தருவர். ஆனாலும் அது போலியறிவே. அறிவுள்ளவனின் அறிவுச் செயலும், அறியாதவனின் அறியாமைச் செயலும் பிறர்க்குப் பளிச்சென்று விளங்குபவை; நன்றாக அடையாளம் கண்டு கொள்ளும் தன்மைகள் வாய்ந்தவை; ஆனால் காரறிவும் காரறிவுச் செயலும், பிறர் கண்டு கொள்வதற்குக் கடினம் வாய்ந்தது; பிறரால் கண்டு

கொள்ள இயலாதது. அதனாலேயே காரறிவாளர் பலர் பேரறிவாளர்களாகவும், பெருந்தொண்டர்களாகவும் உலகப் புறநிலைகளால் இயங்குபவர்களாகவும், ஆனால் அதே பொழுதில், வஞ்சகத்தால் திரட்டிய பெருஞ் செல்வர்களாக அகநிலைகளால் இயங்குபவர்களாகவும் இருப்பர். இதற்கு ஒரே புற அடையாளம் நாளுக்கு நாள், மாதத்திற்கு மாதம், ஆண்டுக்கு ஆண்டு, அவர்கள் முன்னைவிடப் பெருஞ் செல்வர்களாக முன்னேறிக் கொண்டிருப்பதுதான். ஏனெனில் உண்மையான, நேர்மையான, அறிவுணர்வுள்ளவர்களால் அந்த அளவில் செல்வநிலையில் வளர்ச்சி பெற முடியாது. காரணம் செல்வநிலையில் மேம்படுவதற்கான அளவில் அவர்களால் உலகியலில் ஈடுபட இயலாமல் போகும். அதற்கு அவர்களுக்கு மனமும் இல்லை; நேரமும் இல்லை; அந்த அளவில் அவர்கள் பிறர் நலம் கருதும் அறிவாக்கத்திலும், செயலாக்கத்திலுமே ஈடுபட்டு அழுந்திக் கிடப்பர் என்க.

இனி, திருக்குறளில் மட்டுமே காரறிவு என்பது பேசப் பெறுகிறது. அதற்கு விளக்கமும் கூறப் பெறுகிறது:

களவென்னும் காரறி வாண்மை அளவென்னும்
ஆற்றல் புரிந்தார்கண் இல் (287)

—என்பது அக் குறள்.

காரறிவு என்பது திருட்டைச் செய்யும். திருட்டு என்பது பிறர் பொருளை வஞ்சகத்தால், ஏமாற்றால் அவர் அறியாத நேரத்தில், இடத்தில், முறையில் கைக் கொள்ளுவதாகும்; அவ்வழியில் ஒருவன் நல்லவனைப் போல் நடப்பது, நடிப்பது, கள்ளமாகப் பிறர் பொருளைத் தன் வயப் படுத்துவது, அதைச் சரி செய்யக் கள்ளக் கணக்கு எழுதுவது, அது கண்டு பிடிக்கப் பெற்றால், அதை வேறு வேறு வகைகளால் மூடி மறைப்பது போன்ற அனைத்து நிலைகளும் காரறிவால் நிகழ்வனவே; இவ்வகையான திருட்டுகள் மிகத் திறமையாகச் செய்யப்படும் ஆதலால் காரறிவு என வெறுமையாகக் குறிக்காமல் காரறிவாண்மை என்று ஆள் திறனையும் இணைத்துக் கூறுவார் திருவள்ளுவர்; இக் களவு, எதையும் எண்ணி, ஆராய்ந்து, காலம், இடம், பொருள், நன்மை, தீமை, தன்மை, பிறன்மை—முதலியவற்றை அளவிட்டுச் செய்யும் ஆற்றல் உள்ளவர்களிடம் துளியும் இருப்பதில்லை, என்பார் அவர்,

பிறன் பொருளைத் திறம்படத் தன் வயப்படுத்துபவர்க்கும் திறமையான அறிவும், செயலும் தேவைப் படுகின்றன; இவை பிறர்க்கு இழப்பையும் தமக்கு ஆக்கத்தையும் தருதலால், உண்மையான, ஒளி பொருந்தியதான அறிவு என்று கூறாமல், பொய்யானதான, போலியான, வஞ்சகமான அறிவு என்று கூறுதற்குக் காரறிவு என்று விளக்கிக் காட்டுவர் திருவள்ளுவர் பெருமான்;

எனவே, உண்மையறிவு, ஒளியறிவு படைத்த ஒள்ளியரைப் போல் இயங்கும், ஏமாற்றும், வஞ்சிக்கும் கருமனத்தைக்கொண்ட

# கழக எழு வள்ளல்கள்!

நாகரிகம் என்பது மக்களின் புறவளர்ச்சி. உணவு, உடை, உறையுள் முதலிய நிலைகளில் காணுகின்ற முன்னேற்றத் தன்மை-களையே நாகரிகம் என்கிறோம்.

நாகரிகம் என்னும் சொல்லுடன் இணைத்துப் பேசும் மக்கள் வளர்ச்சிக் கூறு பண்பாடு என்பது. பண்பாடு என்னும் சொல்லுக்குப் பண்பட்ட மனநிலை என்பது பொருள். இது மக்க-ளின் அக வளர்ச்சியைக் குறிக்கும்.

தமிழர் தம் பண்பாட்டு வளர்ச்சிகளில் அவர்கள் கொடைத் தன்மை மிகவும் உயர்ந்த பண்பாடு என மதிக்கப் பெறுகிறது. 'கொள் எனக் கொடுத்தல் உயர்ந்தது' என்பது தமிழ் இலக்கியக் கருத்தாகும்.

நம் அரும்பெரும் திருக்குறளில் கொடை பற்றி நிறைய கருத்துகள் சொல்லப் பெறுகின்றன. கொடுத்தல் கொடை. ஈதல் ஈகை. எல்லா அறங்களை விடவும் ஈகை அறம் அஃதாவது கொடை அறம் மிகச் சிறந்த ஒன்றாக மதிக்கப் பெறுகிறது.

ஈதல் இசை பட வாழ்தல் அதுவல்லது
ஊதிய மில்லை உயிர்க்கு. (231)

வறியார்க் கொன் றீவதே ஈகை. (221)

மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று. (222)

ஈத்துவக்கும் இன்பம் அறியார் கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர். (228)

ஏதம் பெருஞ்செல்வம் தான்துவ்வான் தக்கார்க்கொன்று
ஈதல் இயல் பிலா தான். (1006)

போலும் பல கருத்துகள் ஈதலையும் கொடையையும் பெருமை-யாகவும் சிறப்பாகவும் கூறுவதைக் கண்டு பெருமைப் படலாம்.

ஈகை என்பதும் கொடை என்பதும் ஒரு பொருள் பல சொற்கள்.

இருப்பவர் இல்லாதவர்களுக்கு மனம் உவந்து அளித்தலே ஈகை, கொடை ஆகும்.

---

(முன் பக்கத்தொடர்ச்சி)

காரறிவு படைத்த காரறிவாளரிடம் நாம் எச்சரிக்கையுடன் இருத்தல் வேண்டும். ஏனெனில் ஒள்ளியரைப் போலவே இக் கள்ளரும் சிற்சில வகைகளில், சிற்சில நிலைகளில் இயங்குவர் ஆதலின் என்க.

களவினால் ஆகிய ஆக்கம் அளவிறந்து
ஆவது போலக் கெடும். (283)

இல்லாத ஒருவன் தனக்கு இல்லை என்று இருப்பவனிடம் கேட்காத முன்பே, இருப்பவன் இல்லாதவனுக்குக் கொடுத்து உதவுவதே உயர்ந்த குடிப் பண்பு என்பார் திருவள்ளுவர்.

இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே உள. (223)

ஒருவர்க்குக் கொடுப்பது துன்பம் இல்லை; இன்பம் என்கிறது திருக்குறள். பிறர்க்குக் கொடுத்து மகிழும் மகிழ்ச்சியை ஈத்து-வக்கும் இன்பம் என்பார் திருவள்ளுவர்.

இக்காலத்துப் புரட்சிப் பாவேந்தர் பாரதிதாசனும்

''இட்டுப்பார் உணவை; உண்டவர்கள்
இன்புற் றிருக்கையிலே
தொட்டுப்பார் உன் மனத்தை;
தோன்றும் இன்பம்!''

—என்று பாடுவார்.

கொடையை வள்ளல் தன்மை, வள்ளண்மை என்று பழம் புலவர்கள் பாராட்டுவார்கள். வள்ளண்மை உடையவர்கள் வள்ளல்கள் எனப் பாராட்டப் பெறுவர்.

பண்டைக் காலத்திலிருந்தே நம் நாட்டில் கொடை வள்ளல்கள் இருந்து வந்துள்ளனர். தனக்கென வாழாப் பிறர்க்-குரியாளராக வாழ்ந்த அப்பெற்றியர்கள் காலமுறைப்படி மூன்று வரிசையினராகப் பகுத்துக் கூறப் பெறுகின்றனர்.

அவர்கள் முதல் எழு வள்ளல்கள் என்றும், இடை எழு வள்ளல்கள் என்றும், கடையெழு வள்ளல்கள் என்றும், வரிசைப் படுத்தப் பெற்றுள்ளனர்.

அவருள், முதல் எழு வள்ளல்கள் எனப் பெறுவோர், குமணன், சகரன், செம்பியன் (சிபி), துந்துமாரி, நளன், நிருதி—ஆகியோராவர்.

இடையெழு வள்ளல்கள் எனப் பெறுவோர், அக்குரன், அந்திமான், அரிச்சந்திரன், கன்னன் (கர்ணன்), சந்திமான், சிசுபாலன், தந்தவக்கிரன்—ஆகியோராவர்.

கடையெழு வள்ளல்கள் எனப் பெறுவோர், அதிகமான் நெடுமானஞ்சி, வல்வில் ஓரி, மலையமான் நெடுமுடிக்காரி, கண்டீரக்கோ பெருநள்ளி, பாரி, வையாவிக் கோப்பெரும் பேகன், ஆய்அண்டிரன் ஆகியோராவர்.

இவருள் கடையெழு வள்ளல்களாகக் குறிக்கப் பெறுவோரே, இங்குக் கழக எழு வள்ளல்கள் என்னுந் தலைப்பின் கீழ் சுருக்க விளக்கமாகக் குறிக்கப் பெறுகின்றனர்.

கழகக் காலத்தில் ஈகையறம் மிகப் பெரும் பண்பாடாகக் குறிக்கப் பெறுவதுடன், மிக்க புகழ் தரும் நல்லுணர்வாகவும்

அனைவராலும் மதிக்கப் பெற்று வந்ததை நம் கழக (சங்க)த் தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன.

ஈகையறம் பேணி மிகுந்த செல்வத்தையே அறிஞர்களும் அறவோர்களும் சான்றோர்களும் தீதிலாச் செல்வம் என்று புகழ்ந்துரைத்தனர்.

'ஈதலில் குறை காட்டாது, அறன் அறிந்து ஒழுகிய தீதிலான் செல்வம்' என்று அத்தகைய ஈட்டத்தைக் கலித்-தொகை பாராட்டுகிறது.

'ஈதல் இன்பம் வெஃகி, மேவரச்
செய்பொருள் திறவர் ஆகு' வதையே பண்டைத் தமிழர் விரும்பினர் என்பதை அகநானூற்றின் 69-ஆம் பாடலடி நமக்கு உணர்த்துகின்றது.

ஒருவர்க்குக் கொடுக்காமல் திரட்டிய மிகுபொருளை மக்கள் மதித்திலர். மனைவி மக்கள் மட்டுமே உண்டு மகிழ்கின்றவாறு செல்வம் தொகுப்பதை அக்கால மக்கள் விரும்பிலர் என்பதை,

''...தாழ்இருங் கூந்தல்
சுரும்பு உண விரிந்த பெருந்தண் கோதை
இவளினும் சிறந்தது ஈதல் நமக்கு''

—என்னும் அகநானூற்றின் 131 ஆம் செய்யுளடிகள் நன்கு புலப் படுத்துகின்றன,

அவ்வாறு, பிறர்க்கும் உதவித் தாமும் துய்ப்பவர்களை,

'இருள்படு நெஞ்சத்து இடும்பை தீர்க்கும்
அருள் நன்கு உடையர்'—ஆக, மக்கள்

மதித்ததை அகநானூற்றின் 335-ஆம் பாடலடிகள் நமக்கு நன்கு உணர்த்துகின்றன.

தொகுக்கப் பெற்ற செல்வத்திற்குப் பயன் யாதெனின் ஈதலே என்பது,

'செல்வத்துப் பயனே ஈதல்' என்னும் புறநானூற்றுப் பாடல் (189) அடியும்,

ஈதல் செய்து புகழ் பெறுவதே புகழ் என்றும், மற்ற புகழ் நிலைகள் அதற்கு ஈடாகா என்பதும்,

'ஈதலின் புகழும் அன்றே' என்னும் அந்நூலின் 39-ஆம் பாடலடியும், நமக்குத் தெளிவாக உணர்த்துகின்றது.

## 1. அதிகமான் நெடுமான் அஞ்சி!

அதிகமான் நெடுமான் அஞ்சி தகடூரை ஆண்ட அரசன்; எனினும் சிறந்த வள்ளல்;

தகடூர் என்பது இன்றைய தருமபுரியும் அதைச் சுற்றியுள்ள ஊர்களும் சேர்ந்திருந்த நாடு;

அதிகமான்—அதியமான் என்றும் அழைக்கப் பெற்றான்; அவன் அதிகர்—அதியர் என்ற குலத்தில் பிறந்தவன்.

அதிகமான் குதிரை மலைக்குத் தலைவன்.

தருமபுரிக்கு அருகில் இப்பொழுது உள்ள அதமன் கோட்டை கழகக் காலத்தில் அதிகமான் கோட்டை என்று வழங்கப் பெற்றது.

அதிகமானின் முன்னோர் சேரர் குலத்தவர். பனை மாலையையும், கூவிளங்கண்ணி (வில்வ) மாலையையும் அணிந்தவன் அதிகமான்.

அதிகமானின் முன்னோர்களில் ஓர் அரசன் கரும்பை வெளி-நாட்டிலிருந்து தமிழகம் கொணர்ந்து பயிரிட்டான் என்று ஒரு செய்தி கூறப் பெறுகிறது.

'எழினி' என்னும் பெயர் இவனுக்குண்டு.

''ஊராது ஏந்திய குதிரைக் கூர்வேல்
கூவிளங் கண்ணிக் கொடும்பூண் எழினி'

—என்பது பெருஞ்சித்திரனார் பாடிய பாடல்: புறநானூற்றில் 158-ஆம் பாடல் வரி அது. 'இதில் ஊராது ஏந்திய குதிரை'—என்பது குதிரை மலையைக் குறித்தது.

அதிகமானைப் பாடிய புலவர்கள் ஔவையார், பரணர், பெருஞ்சித்திரனார், பொன் முடியார் ஆகியோர்.

திருக்கோவலூர் அரசனை இவன் போரில் வென்றதை ஔவையார்,

முரண்மிகு கோவலூர் நூறிநின்
அரண்அடு திகிரி ஏந்திய தோளே!

—என்றும்,

மறப்புலி உடலின் மான்கணம் உளவோ
.........
இருளும் உண்டோ ஞாயிறு சினவின்
............
பொருநரும் உளரோ நீகளம் புகினே!

—என்றும் பாராட்டிப் பாடியுள்ளார்.

''வீரஞ் செறிந்த புலி வெகுண்டு எழுந்தால் மான் கூட்டம் இருக்குமா? ஞாயிறு சினம் கொண்டால் இருளும் நிற்குமா? அதிகமானே, நீ போர்க் களம் புகுந்தால் பகைவரும் உளரோ?'' என்பது அவர் பாராட்டியுரைத்த கருத்துகள்.

'துன்புற்ற காலத்தும் புலவர்களை ஆதரிக்கும் பண்புடை-யவன்'

'அலத்தற் காலையாயினும் புரத்தல் வல்லான்' என்பது ஔவையார் கூற்று.

'அதிகமான் ஔவையார் மேல் மிகுந்த மதிப்பும் பற்றும் வைத்திருந்தான்.

''ஒருநாள் இல்லை; இருநாள் இல்லை; பலநாள் பலரோடு சென்றாலும், தலைநாள் காட்டிய அன்புடனேயே அவன் வரவேற்றுப் பாரட்டுவான். அணிகளைப் பூண்ட யானைகளொடும், இயங்குகின்ற தேர்களொடும் விளங்கும் அதியமானிடம், பரிசில் பெறுவதற்குரிய காலம் நீண்டு இருப்பினும், குறுகியிருப்பினும், யானையானது தான் உண்ணுவதற்கு ஒரு பொருளைத் தன் துதிக்கையால் எடுத்துக் கொண்டால், அது எங்ஙன் தப்பாதோ, அப்படி அப் பரிசில் தவறாது கிடைக்கும்''—என்று பாடுகிறார் ஔவையார்.

''ஒருநாட் செல்லலம் இருநாட் செல்லலம்
பலநாள் பயின்று பலரொடு செல்லினும்
தலைநாள் போன்ற விருப்பினன் மாதோ!
அணிபூண் அணிந்த யானை இயல்தேர்
அதியமான் பரிசில் பெறூஉங் காலம்
நீட்டினும் நீட்டா தாயினும் யானைதன்
கோட்டிடை வைத்த கவளம் போலக்
கையகத்தது; அது பொய்யா காதே'' —(புறம்)

ஔவையார் மேல் அதியமான் அன்பும் மதிப்பும் வைத்திருந்தது போலவே, ஔவையாரும் அதியமான் மேல் அவனுக்குக் குறையாத அன்பும் மதிப்பும் வைத்திருந்தார்.

தகடூருக் கருகில் சேலம் மாவட்டத்தில் உள்ள கஞ்சமலை என்னும் சித்தர்கள் வாழ்ந்த ஒரு மலையில் ஏராளமான மூலிகைகள் இன்றைக்கும் உண்டு. அங்கு சாவை நெடுங்காலம் தள்ளி வைக்கும் மூலிகைகள் பல விளைவு கொண்டிருந்தன. அவற்றுள் ஒன்று கருநெல்லி மரம்! அதில் அரிதாகப் பழுத்திருந்த கனி ஒன்றைக் குறவர்கள் பறித்து அதியமானுக்கு அன்பளிப்பாகக் கொடுத்திருந்தனர். அதை ஔவையார் நீடு வாழும் பொருட்டு அதியமான் அவருக்கு ஈந்த செய்தி இலக்கியத்தில் பெரிதாகப் பேசப் பெறுகிறது.

பெருமலை விடரகத்து அருமிசை கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது
ஆதல் நின்னகத் தடக்கிச்
சாதல் நீங்க எமக்கீந் தனையே!

—என்று, நெல்லிக் கனியைப் பெற்ற ஔவையார் அதியனைப் பாராட்டியுரைத்த பாடல் ஒன்று புறநானூற்றில் உள்ளது.

அதியமான் புலவர்க்கும், ஏழையர்க்கும் அருஞ்செல்வங்களையும் விலைமதிப்புற்ற பொன், பொருள்களையும், வரையாது கொடுத்துப் பெரும் புகழ் பெற்றான்.

(தொடரும்)

# வல்லினம் மிகுதலும், மிகாமையும்!

## புலவர் இறைக்குருவனர்

ஒரு திருத்தம்:

(சென்ற இதழில் வெளிவந்த 29-ஆம் எண்ணுள்ள கருத்து வரித் தொடக்கத்தை...

29. எது, எவை, ஏது, யாது, யாவை, என்ன, என்று, எத்தனை, எவ்வளவு, எவ்வாறு என்னும் வினுப் பெயர்களின்...

—என்றவாறு திருத்தித் தொடர்ந்து படித்துக் கொள்க.)

46. வன்தொடர்க் குற்றியலுகரத்தின் பின்னும், சிறுபான்மை மென்தொடர்க் குற்றியலுகரத்தின் பின்னும் தவிரப் பிற குற்றியலுகரங்களின் பின் வல்லினம் மிகாது,

முதலில் குற்றியலுகரம் என்பது என்ன என்பதைத் தெரிந்து கொள்வோம்:

'உ' என்னும் எழுத்தே உகரம்.

இயல்பாக உகரம் ஒலிக்கும் கால அளவு ஒரு மாத்திரையாகும். (ஒரு மாத்திரை நேரம் என்பது கண் இமைகள் இரண்டும் ஒரு முறை பொருந்திப் பிரியும்நேரம். அதே போல் கை நடுவிரலும், கட்டை விரலும் கூடி ஒரு சொடுக்குப் போடும் நேரம்.)

இவ்வாறு 'உ' கரம் ஒரு மாத்திரை அளவு நேரம் ஒலிக்காமல், சில இடங்களில் குறுகி அரை மாத்திரை அளவு நேரம் ஒலிப்பதும் உண்டு. அந்த இடத்தில் உள்ள 'உ'கரம் குற்றியலுகரம் எனப்பெறும்.

பொறு, படு, பசு, குபு, அது, தொகு—என்பன போலும் குறிலிணைச் சொற்களாக இல்லாமல், பேறு, பாடு, மூசு என்பன போலும் நெட்டெழுத்துகள் தொடரவோ, தூற்று, பாட்டு, மூச்சு என்பன போலும் பல எழுத்துகள் தொடரவோ வந்து, சொற்களின் இறுதியில் வல்லின மெய்கள் (க்,ச்,ட்,த்,ப்,ற் எனும்) ஆறின் மேலும் ஏறி வரும் கு,சு,டு,து,பு,று எனும் ஆறு உகர எழுத்துகள் அரை மாத்திரை அளவே ஒலிக்கும். இவ்வாறு அரை மாத்திரையாகக் குறைந்து ஒலிக்கும் இறுதியில் உள்ள அவ்வாறு வல்லின உகர எழுத்துகளே குற்றியலுகரம் ஆகும்.

இவையும், இறுதி எழுத்தின் முன்னர் இடம் பெற்றுள்ள எழுத்தைப் பொறுத்து ஆறு வகையாகச் சொல்லப் பெறும்,

அவ் வாறு வகையும் பெயரும் இவை:

சாறு—'சா' என்னும் நெட்டெழுத்தைத் தொடர்ந்து வந்ததால், இது நெடில் தொடர்க் குற்றியலுகரம்.

பட்டு—'ட்' என்னும் வல்லெழுத்தைத் தொடர்ந்து வந்ததால், இது வன்தொடர்க் குற்றியலுகரம்.

மஞ்சு—'ஞ்' என்னும் மெல்லெழுத்தைத் தொடர்ந்து வந்ததால், இது மென்தொடர்க் குற்றியலுகரம்.

சார்பு—'ர்' என்னும் இடையெழுத்தைத் தொடர்ந்து வந்ததால், இ'து இடைத் தொடர்க் குற்றியலுகரம்.
வலிது—'இ' (ல்+இ) என்னும் உயிரெழுத்தைத் தொடர்ந்து வந்ததால், இ'து உயிர்த் தொடர்க் குற்றியலுகரம்.
எஃது—'ஃ' என்னும் ஆய்த எழுத்தைத் தொடர்ந்து வந்ததால், இ'து ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம்.

முற்றியலுகரம்: உகரத்தில் முடியினும் குற்றியலுகரம் அல்லாதன வெல்லாம் முற்றியலுகரம் எனப்பெறும்.

(எ-டு) கடு, கதவு.

'பாட்டு' என்பது வன்தொடர்க் குற்றியலுகரம்.

'பாட்டுப் பாடு' என்னும் தொடரில் பாடு என்னும் வருமொழியை (வல்லின உயிர் மெய்த் தொடக்கத்தை) நோக்கிப் பாட்டு என்பதன் பின் வல்லெழுத்து மிகுந்தது.

வன் தொடர்க் குற்றியலுகரத்தின் பின் வல்லெழுத்து மிகும்.

(எ-டு) பற்றுக் கோடு, கட்டுப் போடு
திட்டுப் படுமா? பாக்குக் கொடு
மட்டுப் படுத்து, சீட்டுப் பிடி
சாக்குச் சொன்னான்; போக்குக் காட்டினான்

நெடில் தொடர்க் குற்றியலுகரமும், உயிர்த் தொடர்க் குற்றியலுகரமும், வருமொழி நோக்கி இரட்டித்து வன்தொடர்க் குற்றியலுகரம் ஆதலும் உண்டு. அவையும் மேற்கண்டவாறே புணரும்.

(எ-டு) ஆறு+பாசனம்—ஆற்றுப் பாசனம்
நாடு+அரசு —நாட்டரசு
அசடு+பையல்—அசட்டுப் பையல்
கூடு+புழு —கூட்டுப் புழு

48. மென்தொடர்க் குற்றியலுகரத்தின் பின்னும் வல்லெழுத்து மிகும்.

'மருந்துக் கடை' என்பதில் மருந்து என்பது மென்தொடர்க் குற்றியலுகரம்.

கடை என்னும் வருமொழி நோக்கி மருந்து என்பதன் பின் வல்லெழுத்து மிகுந்துள்ளது.

(எ-டு) நண்டுக் கால் அன்புத் தளை
பஞ்சுப் பொதி குரங்குக் கை
குண்டுக் கல் கன்றுக் குட்டி

குறிப்பு: வன்தொடர்க் குற்றியலுகரத்தின் பின்னும் சிறுபான்மை மென்தொடர்க் குற்றியலுகரத்தின் பின்னும் தவிரப் பிற குற்றியலுகரங்களின் பின் வல்லினம் மிகாது.

49. திரு என்னும் அடைமொழியின் பின் வல்லெழுத்து மிகும்.

'திருக்குறள்' என்பதில் 'திரு' என்பது குறள் நூலுக்குச் சிறப்பு பற்றிய அடைமொழியாக முன்னிற்கிறது.

வருமொழிக் கேற்பத் "திரு"வின் பின் வல்லெழுத்து மிகுந்து திருக்குறளாக விளங்குகிறது.

எனவே, திரு என்னும் அடைமொழியின் பின் வல்லெழுத்து மிகும்.

(எ-டு) திருக்குமரன் திருத்தக்க தேவர்
திருப்பாணாழ்வார் திருக்கண்ணப்பர்

குறிப்பு: இக் காலத்தில் மக்கட் பெயருக்கு முன் மதிப்பு அடைமொழியாக வழங்கப்படும் திரு, உயர்திரு, தவத்திரு, தமிழ்த்திரு முதலான அடைமொழிகளின் பின் புள்ளி வைத்தும், வல்லெழுத்து மிகுக்காமலும் எழுதுவது பெரு வழக்காகி விட்டது;

(எ-டு) திரு. தமிழ்வாணன்
உயர்திரு. தமிழ்ச் செம்மல்
தமிழ்த்திரு. தேவநேயர்
தவத்திரு. குன்றக்குடியடிகளார்

—ஆகவே, இவ்வாறு எழுதுவதை வழுவமைதியாகக் கொள்ளுதல் வேண்டும்.

50: இனி, நடு, முன்னர், பின்னர், மற்றை, மற்று, குறித்து, பொருட்டு, பற்றி, தவிர, விட—முதலான பல்வகைச் சொற்களின் பின்னும் வல்லெழுத்து மிகும்.

(எ-டு) இனிச் செய் குறித்துப் பேசினான்
நடுப் படுத்தி அவன் பொருட்டுச் செய்தேன்
முன்னர்ப் போனவன் பற்றிக் கொண்டது
பின்னர்க் கண்டான் அது தவிரப் பிற கூறு
மற்றைப் பகுதி சொல்வதை விடச் செய்
மற்றுச் சொல்வதென்ன?

51; படி என்னும் சொல் அப்படி, இப்படி, எப்படி எனச் சுட்டெழுத்து வினா எழுத்துகளை ஒட்டி நிற்கும் இடங்களில் மட்டுமே அவற்றின் பின் வல்லெழுத்து மிகும். வேறு எந்தப் படி யீற்றுச் சொல்லின் பின்னும் வல்லெழுத்து மிகாது;

(எ-டு) மிகும் இடங்கள் மிகா இடங்கள்
அப்படிச் சொல் வந்தபடி போனான்
இப்படிக் கேள் முப்படி தாண்டினான்
எப்படிப் போகலாம் வரும்படி காணாது

52. றகர, லகர, ளகர ஒற்றுகளின் பின் வல்லெழுத்து மிகாது;

கற்ச்சிலை, கால்ப்பகுதி, வாள்ப்பட்டறை என்று பெரிய ஆள்கள் சிலர் எழுதுவதெல்லாம் பிழை, பிழை, பிழை.

53; 'நேசமணி பதிப்பகம்' என்பது போலச் சிறப்புப் பெயர் தாங்கிய பெயர்த் தொடர்களில், சிறப்புப் பெயரை அடுத்து வல்லெழுத்து மிகாது;

(எ-டு) கண்ணகி காய்கறிக் கடை
அன்னை பால் வழங்கு நிலையம்
மறைமலை தொடர்வண்டி நிலையம்

54: அஃறிணை இரண்டாம் வேற்றுமைத் தொகையில் வல்லெழுத்து மிகாதாயினும் (11-ஆம் எண் கருத்தைப் பார்க்க) வன்தொடர்க் குற்றியலுகரத் தொடராக வரும் இடங்களில் மிகுதல் வழக்கு:

(எ-டு) பாட்டுப் பாடு
மெய்ப்புக் கொடு

55: பொதுவாக அடுக்குத் தொடர், இரட்டைக் கிளவி ஆகியவை இயல்பாக வருமிடங்களில் வல்லெழுத்து மிகாது:

(எ-டு) படி! படி! சல சல
கொடு! கொடு! பொல பொல

56. எச்சங்கள் அடுக்குச் சொற்களாக வரும் பொழுதும் தனி, படி முதலிய சொற்கள் இரட்டைக் கிளவிகளாக வருமிடங்களிலும் வல்லெழுத்து மிகும்:

(எ-டு) பன்னிப் பன்னிப் பேசினர்: (அடுக்கு)
தனித் தனியே, படிப்படியாக (இரட்டைக்கிளவி)

57: சில அடுக்குச் சொற்கள் பேசப்பெறும் குறிப்புகளைக் கொண்டு வல்லெழுத்து மிகாமலும் வரும்:

(எ-டு) பார்த்து! பார்த்து!

58: 'கள்' எனும் பன்மை இறுதிநிலை, ஓரெழுத்தொருமொழியுடனும், குறிலிணையுடனும், குறில் நெடிலுடனும் புணரும் பொழுது வல்லெழுத்து மிகும்:

(எ-டு) ஆக்கள் (ஓரெழுத்தொரு மொழி)
உடுக்கள் (குறிலிணை)
புறாக்கள் (குறில் நெடில்)

60: முன்னுள்ள இடங்கள் தவிரப் பிற இடங்களில் எல்லாம், அது வன்தொடர்க் குற்றியலுகரமே ஆயினும் 'கள்' பன்மை இறுதிநிலை புணருங்கால், வலி மிகாமல் வருவதே சிறப்பு:

'எழுத்து' என்னும் சொல் வன்தொடர்க் குற்றியலுகரம்:
'கள்' என்பது பன்மை குறித்த இறுதிநிலை; தனிச் சொல்லன்று.

புணர்ச்சியிலக்கணம் இரண்டு சொற்களுக்கிடையில் நிகழுவதன்றி, ஒரு சொல்லுக்கும் அதனுடன் இணைந்து பன்மை குறிக்கும் 'கள்' இறுதி நிலைக்கும் அன்று:

ஆகவே எழுத்து என்னும் சொல்லுடன் அல்லது வேறு குற்றியலுகரச் சொற்களுடன் 'கள்' என்னும் பன்மை இறுதி சேரும் பொழுது இயல்பாக வருவதே சரி:

சிலர் 'கள்' இறுதியை ஒரு தனிச் சொல்லாகக் கொண்டு வல்லினம் புணர்த்து எழுத்துக்கள் என்று எழுதுவது சரியன்று:

# பறக்கும் தட்டுகள்!

வால் விண்மீன் புதிர்கள் இந்த விண்வெளிப் பயணியுடன் மட்டும் நின்று விடவில்லை. 1926-இல் காணப்பட்ட ஒரு வால் விண்மீன் விண் வெளியில் தனது வாலைத் திருப்பி அதனுடைய பரப்புப் பாதையில் முற்றிலும் நம்புதற்கரிய ஒரு மாற்றத்தைச் செய்தது. மண்ணுலக வாழ்நர்களுக்கு வேறானவர்கள் அதை ஏன் செய்தனர், பார்க்கப் போனால் அவர்கள் விண்வெளியில் செம்மையாகப் பயணம் செய்து, எந்த விண்வெளிப் பொருளிலும் இறங்க முடியும். 'வருங்காலத்தின் ஏவுகணைகள் (இராக்கெட்டுகள்)' என்ற நூலில் அதன் ஆசிரியர்கள் வி.பர்தகோவும், ஒய். டேனிலோவும், இந்த வால் விண்மீன்கள் உலக வகைப் பட்ட பிற நாகரிகங்களின் தூதுவர்கள் என்று கருதுகின்றனர். அந் நாகரிகங்களுக்கு உரியவர்கள் அப்பொழுதுதான் விண்வெளியை ஆய்வு செய்யத் தொடங்கியுள்ளனர் என்றும், மிக அருகிலுள்ள விண்மீன்களை ஆராய்வதற்கு வால்மீன்களைப் பயன்படுத்துகின்றனர் என்றும் அவர்கள் கூறினர்.

ஒரு வேற்றுக் கோளிலிருந்து அனுப்பிய செயற்கைக் கலம் கதிரவன் மண்டிலத்தில் தோன்றியதாகக் கற்பனை செய்து கொள்வோம். காலத்தின் அடர்த்தியின் துணைக் கொண்டு, அக் கப்பலைச் சுற்றியுள்ள வெற்றிடத்தின் நிலை மாற்றமடைகிறது; இது செறிவு தளர்ச்சியுறுவதன் திசையிலன்று, அழுத்தம் அதிகரிக்கும் திசையில் இந்த மாற்றம் ஏற்படுகிறது. கப்பலோடு கூட அண்டவெளி அழுத்தம் பெறுகிறது. வெளியிலிருந்து பார்க்கும் ஒரு பார்வையாளருக்கு இந்தக் கப்பல், நடைமுறையில் அக் கப்பலினுள் பரிமாணங்கள் மாறாமல் அப்படியே இருந்த போதிலும் மிகச் சிறியதாகத் தெரியும். விண்மீன்களுக்கிடையில் செல்லும் அந்தப் பெருமாண்டமான கப்பல் சில நூற்றளவி (சென்டி மீட்டர்) விட்டமே உடைய ஒளி வீசும் ஒரு பந்தைப் போல் காட்சியளிக்கிறது. யாரும் காணாதவாறு அது நிலவுலகு நோக்கி வருகிறது. அதனுடைய காற்று மண்டலத்தில் உள் நுழைகிறது. அதைக் காண்பவர்கள், தாங்கள் ஒரு பறக்கும் தட்டைக் கண்டதாகக் கூறுவார்கள்.

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

அவ்வாறு எழுத்து + கள் என்பதை "எழுத்துக்கள்" என்று எழுதினால், மூக்குக்கள், பாக்குக்கள், தோப்புக்கள் என்றுதானே எழுதுதல் வேண்டும்.

ஆகவே, 'கள்' என்னும் இறுதி நிலைக்கு முன் வல்லெழுத்து மிகாமையையே கடைப் பிடித்தல் வேண்டும்.

(எ-டு) எழுத்து—எழுத்துகள் வழுத்து—வழுத்துகள்
தேக்கு —தேக்குகள் சுற்று —சுற்றுகள்
மூச்சு —மூச்சுகள் தட்டு —தட்டுகள்
பூட்டு —பூட்டுகள் குச்சு —குச்சுகள் (முற்றும்)

நிலவுலகின் வாழ்நர் சிலர், சில நேரங்களில், மண்ணுலகுக்கு அப்பாற்பட்ட உலகைச் சேர்ந்தவர்களுடன் தொடர்பு கொண்டிருந்ததாகவும், அவர்களின் கப்பல்களில் அவர்கள் ஏற்றிக் கொள்ளப் பட்டதாகவும் கூட உறுதிப் படுத்தப் பெறாத செய்திகள் கூறுகின்றன.

எடுத்துக் காட்டாக, அவ்வாறு அதை நேரில் கண்ட ஒருவர், ஓர் ஓவியர், அந்தக் கப்பல் பறந்து சென்றபோது, அதனுள் இருந்த காற்று ஒருவகைத் திண்மையாக வளரத் தொடங்கியது என்று கூறினார். இது, வெற்றிடம் நெருக்கப் பட்டதற்கு நேரிடையான சான்று பகர்கிறது.

மற்றொருவர், ஒரு படைத்துறை வீரர், ஒரு சிறிய கப்பலைப் போல் தோன்றியதனுள் தாம் உள் நுழைந்த போது, எவ்வாறு முடிவற்ற தாழ்வாரத்தின் வழியாகத் தாம் நீண்ட தூரம் அழைத்துச் செல்லப் பட்டதைப் பற்றி மிகவும் வியப்படைந்த-தாகக் கூறினார். அக் கப்பலினுள் உள்ள வெற்றிடம் அழுத்தப்பட்-டிருக்கும் உண்மையைக் குறிப்பிட்டுக் காட்டுவதாக அமைந்துள்-ளது. வேறு சொற்களில் கூறுவதெனில், வெளியிலிருந்து பார்க்-கும் ஒருவர்க்குப் பறக்கும் தட்டு சிறியதாகத் தோன்றுகிறது. ஆனால், உள்ளே அதன் அளவுகள் மாறாமல் உள்ளன. உண்மையில் பெரியவையாகவும் உள்ளன.

ஒரு பறக்கும் தட்டின் கட்டமைப்பை அறிந்துள்ள நிலையில், அதனுடைய பல புதிர்களை விளக்குவது எளிது. திடீரென்று அவை மறைவது உருக்குலைவான விண்வெளியில் அவை மூழ்கிச் செல்வதைத் தவிர வேறன்று. சிறியதாகத் தோன்றும் பரிமாணங்-கள், கப்பலைச் சுற்றிலும் விண்வெளி அழுத்தப்பட்டிருப்பதன் விளைவே ஆகும். ஒரு பறக்கும் தட்டின் வடிவம் பற்றிய கருத்து (வெளித்தோற்றம்) அதிக முக்காமை உடையதன்று என்று தோன்றுகிறது. சோவியத்து ஒன்றியத்தின் நிலப் பரப்பில் பறக்-கும் தட்டுகளைப் பார்த்ததாக வந்த செய்திகளில் 85 விழுக்காடு வழக்கத்திற்கு மாறான பண்புகளை வெளிப்படுத்தும் ஒளிவீசும் பொருள்களைப் பற்றிய வருணனைகள் உள்ளன: மற்றும் அவை பந்துகள், தட்டுகள், புள்ளிகள், குவி மாடம், கூம்புகள், முக் கோணங்கள், ‘டம்—பெல்சு’ எனப்பெறும் உடற்பயிற்சிக் கருவி-கள், துளிகள் போலும் மிகவும் வெவ்வேறான வடிவங்களைப் பெற்றிருந்தன.

சில சமயங்களில் சிலர், பறக்கும் தட்டுகளைப் புகைப்படமும் பிடிக்க முடிந்துள்ளது: ஆனால் கண்களால் பார்க்கப் படுபவை பல சூழ்நிலைகளில் படச் சுருளில் பதிவாவதில்லை; ஏன் அவ்வாறு? பறக்கும் தட்டு, கண நேரமே, துடிக்கும் முறையில் தோன்று-வதே இதன் காரணமாகும்.

நிலவுலகில் உள்ள நம்மைக் காட்டிலும், வேறு கோள்கள் அல்லது உலகங்களில் வாழ்கின்றவர்கள், அவர்களின் வளர்ச்சி-யில் வெகு தூரம் முன்னேற்றம் அடைந்திருப்பதுடன், தொலை-

விலுள்ள கமுக்கங்களைத் தெளிவாக உணர்ந்துள்ளனர். அது மட்டுமன்று அவர்கள் எந்த ஒருவரின் மனத்திலும் 'ஊடுருவிச் சென்று, அவருடைய எண்ணங்களை, அவர் அதைப் பற்றி ஐயுறுத முறையிலேயே உய்த்துணர்ந்தறியக் கற்றுள்ளனர்.

எனவே, காற்று மண்டிலத்தில், தங்குதடையின்றிப் பாய்ந்து செல்லும் வெவ்வேறு வடிவங்களிலான, ஒளி வீசும் பறக்கும் தட்டுகள் எல்லாம்—எந்த வடிவத்திலும், எந்த வேகத்திலும் பறந்து, கணநேரம் தோன்றி மறையும் அவையெல்லாம்—அழுத்தத்திற்குள்ளாகியுள்ள விண்வெளியிலுள்ள வேற்றுலகம் வாழ்பவருடைய கப்பல்களைத் தவிர வேறல்ல.

நம் காலத்திற்கு முந்திய தொல் பண்டைக் காலத்தவர்கள், அவர்களுக்கு, வழக்கத்திற்கு மாறாகத் தென்பட்டவற்றைத் தங்கள் வாழ்க்கையில் தங்களைச் சுற்றிலும் இருந்த இயற்கையான செய்திகளுக்கு ஒப்பிட்டுள்ளனர். அதனால்தான் அவர்கள் காலத்தில் வானில் பறக்கக் கண்ட பிற உலகக் கப்பல்களை அம்புகள், தேர்கள், மரக்கலங்கள் முதலிய பெயர்களால் அழைத்தனர். இறக்கைகளுடன் கூடிய தட்டுகளின் படங்களும் அரியப்பட்டுள்ளன. பண்டைக் காலத்திய ஓவியர்கள் பறக்கும் தட்டுகளை இவ்வாறு தாம் சித்தரித்துள்ளனர்.

இதுவரை, மேலே கூறியவற்றையெல்லாம் தொகுத்துப் பார்ப்போம். அவ்வாறு நமக்கு இதுவரை கிடைத்துள்ள கடந்த கால புலனங்களையெல்லாம் வேறுசில உய்த்துணர்வுகளுடன் ஒன்றாக இணைத்துத் தொகுத்துப் பார்த்தால், இவ்வுலகில் உயிர் வாழ்க்கையின் வளர்ச்சி, பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக ஒரு மேம்பட்ட, மண்ணுலகுக்கு அப்பாற்பட்ட வேற்றுலகு நாகரிகத்தினால் மேற்பார்வையிடப் பெற்று வந்துள்ளது என்று பெருமளவு உறுதியாகக் கூறுவதற்கு அவை நம்மை ஒப்புக்கொள்ளச் செய்கின்றன. பிறகு கீழ்க்காணும் முடிவுக்குத்தான் நாம் வரவேண்டியிருக்கும்.

மண்ணுலகுக்கு அப்பாற்பட்ட வேற்றுலகர்கள் நம் உலகின் மீது அடிக்கடி தோன்றுகின்றனர்; விண்மீன்களுக்கு இடையில் பயணம் செய்யும் அவர்களின் விண் கப்பல்கள் விண் வெளியை நடை முறையில் கண நேரத்தில் கடந்து செல்கின்றன. அந்த முன்னேற்றமான நாகரிகமுடையவர்கள், மண்ணுலக வாழ்நர்களாகிய நமக்கு, நுண்திறத்துடன் உதவிகள் செய்வதின் பல எடுத்துக்காட்டுகளைக் காணலாம்.

நமது ஊழியின் மூன்றாவது ஆயிரமாண்டு (கிறித்துவ ஆண்டெண்ணிக்கையை வைத்துச் சொல்லப் பெறுகிறது) அந்த வெளியுலகநாகரிகத்துடன் நமக்கு ஏற்படும் தொடர்பைத் தோற்றுவித்து நடத்துவிக்கும் ஆயிரமாண்டு என்று சொல்லும்படி இருந்தல் வேண்டும். அக்கால், பல்வேறான தன்மைகளுடன் கூடிய தொலைதூர விண்மீன் உலகங்கள்—நமக்குத் திறக்கப் பெற்றிருக்கும்.

நன்றி: சோவியத்துப் பலகணி;

# இசுலாமிய நாடுகள்

இக்கால், உலகில் மொத்தம் 45 முசுலீம் நாடுகள் இருக்கின்றன; இசுலாமியர்களின் மக்கள் தொகை நூறு கோடிக்கும் அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது;

சில இசுலாமிய நாடுகளின் பெயர்களும் அவற்றில் உள்ள இசுலாமிய மக்கள் தொகையும் கீழே கொடுக்கப் படுகின்றன;

| | | | | |
|---|---|---|---|---|
| இந்தோனேசியா | — | 16 கோடியே 10 இலக்கம் | | |
| பங்களாதேசம் | — | 10 கோடி | | |
| பாக்கித்தான் | — | 9 கோடி | | |
| நைசீரியா | — | 10 கோடி | | |
| துருக்கி | — | 6 கோடியே 60 இலக்கம் | | |
| ஈரான் | — | 4 கோடியே 80 இலக்கம் | | |
| எகிப்து | — | 5 ,, | 10 | ,, |
| அல்சீரியா | — | 2 ,, | 20 | ,, |
| மொராக்கோ | — | 2 ,, | 40 | ,, |
| ஆப்கானித்தான் | — | 1 ,, | 80 | ,, |
| சூடான் | — | 2 ,, | 20 | ,, |
| மலேசியா | — | 1 ,, | 45 | ,, |
| ஈராக் | — | 2 ,, | 45 | ,, |
| சிரியா (Syria) | — | 1 ,, | 10 | ,, |
| சவூதி அரேபியா | — | 1 ,, | 5 | ,, |
| துனிசியா (Tunisia) | — | ,, | 70 | ,, |
| செனகல் (Senegal) | | | 70 | இலக்கம் |
| சோமலியா (Somalia) | | | 50 | ,, |
| சாட் (Chad) | | | 40 | ,, |
| சோர்டான் | | | 30 | ,, |
| லிபியா (Libiya) | | | 30 | ,, |
| மாவுரிடானியா (Mauritania) | | | 20 | ,, |
| குவைத் | | | 10 | ,, |

முசுலீம்கள் சிறுபான்மையினராக வாழ்ந்து கொண்டிருக்கும் சில நாடுகளின் பெயர்கள்;

| | | | |
|---|---|---|---|
| இந்தியா | 10 கோடி | | |
| உருசியா | 6 கோடி | | |
| சீனா | 9 கோடி | | |
| அமெரிக்கா | | 30 | இலக்கம் |
| பிரான்சு | | 20 | ,, |
| இங்கிலாந்து | | 20 | ,, |
| மேற்கு செருமனி | | 15 | ,, |

தொகுப்பு: எசு. ஏ. அசீசு

நன்றி: சமரசம்: 1-15 மே '90

# தெரிந்து கொள்ளுங்கள்

- இந்தியப் படையில் போர் வானூர்தி ஓட்டுகின்ற ஒருவர்க்குப் பயிற்சி அளிப்பதற்கு மட்டும் இந்திய அரசு ஏறத்தாழ 60 இலக்கம் உருபா செலவிடுகிறது.
- இப்பொழுதைய நிலையில் இந்தியாவில் உள்ள யானைகளின் எண்ணிக்கை ஏறத்தாழ 6 இலக்கத்து 20 ஆயிரம் ஆகும்.
- செடிகள், மரங்களிலிருந்து பறித்த பின் பழங்களையும் காய்கறிகளையும் பாதுகாப்பதற்கான வசதிகள் இந்தியாவில் போதிய அளவு இல்லாமையால் ஆண்டு தோறும் 3000 கோடி உருபா மதிப்புக்கு அவை அழுகி வீணாகப் போய் விடுகின்றன என்று ஓர் அரசுக் குறிப்பு கூறுகிறது.
- இயற்கையில் உள்ள மணப் பொருள்களையும், செயற்கையாக நாம் செய்கின்ற மணப்பொருள்களையும் கணக்கிட்டால் அவை ஏறத்தாழ 1500-ஐ எட்டும் என்று சொல்லப் பெறுகிறது.
- ஒவ்வொரு நாளும் உலகின் பல்வேறு பகுதிகளில் ஏறத்தாழ 40,000 குழந்தைகள் இறந்து போகின்றன என்று உலக ஒன்றிய அவையின் அனைத்துலகக் குழந்தைகள் நலக்காப்பு அமைப்பு (UNICEF) தெரிவித்துள்ளது.
- 1920-ஆம் ஆண்டில் சிதம்பரத்தில் மீனாட்சி கல்லூரியாகத் தொடங்கப் பெற்ற கல்லூரிதான், அதன் நிறுவனர் அரசவயவர் திரு. அண்ணாமலை அரசரின் பெருங் கொடையால் 1929-ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகமாக வளர்ச்சி பெற்று, எழில் கொஞ்சும் அமைதியான இயற்கைச் சூழலில் அமைந்தது.

---

# தமிழைப் பயிற்றுவிக்கும் உலகப் பல்கலைக் கழகங்கள்!!

1. செக்கோசுலாவியா:
   1. சார்லசு 2. பிரேக்.
2. இங்கிலாந்து:
   1. இலண்டன் 2. கேம்பிரிட்சு 3. இசுக்காந்துலாந்து.
3. பிரான்சு:
   1. கீழ்க் கலையியல் பல்கலைக்கழகம்
4. செருமனி:
   1. மார்டின் லூதர், ஏல்லோ. 2. ஐடல் பர்க் 3. கலேசின்
   4. மார்பர்க் 5. அம்பர்க்கு 6. கீழ் மேற்கு செர்மனியம்
5. ஆலந்து: லெய்டன்.
6. இலங்கை; 1. யாழப்பாணத் தமிழ்ப் பல்கலைக் கழகம், 2. கொழும்பு பல்கலைக் கழகம், 3. வித்யோதையா.
7. மலேசியா: மலேசியா பல்கலைக் கழகம்.
8. உருசியா: மாசுக்கோ.
9. சுவீடன்: இசுடாக் ஓம்.
10. வட அமெரிக்கா:
    1. பென்சில்வேனியா, 2. கலிபோர்னியா 3. சிகாகோ.

# தமிழ்நாட்டில் கோயில்கள்!

தமிழ் நாட்டில் கோவில்களும் மடங்களும் மொத்தம் 51,833 இருக்கின்றன; கோயில்கள் மட்டும் 34, 230; இவற்றிற்குச் சொந்தமான நன்செய், புன்செய் நிலங்கள் மொத்தம் 6 இலக்கம் குறுக்கங்களுக்கு (ஏக்கர்களுக்கு) மேல் இருக்கின்றன. இவற்றுள் 23,491 கோவில்கள், 155 மடங்கள், அந்த மடங்களுக்குச் சொந்த மான 66 கோவில்கள், 1255 தனி அறநிலையங்கள், 16 சைன கோயில்கள், 197 அறநிலையங்கள் ஆகியவற்றுக்குச் சொந்தமாக 5.25 இலக்கம் (குறுக்கம்) நிலங்கள் இருக்கின்றன. தமிழகக் கோயில்களில் உள்ள நகைகளின் மொத்த மதிப்பீடு 49 கோடி உருபாவாகும்;

## வெளிப்பகட்டுப் புலவர்கள்!

விரகர் இருவர் புகழ்ந்திடவும் வேண்டும்;
விரல் நிறைய மோதிரங்கள் வேண்டும்—அரையதனில்
பஞ்சேனும் பட்டேனும் வேண்டும்; அவர்கவிதை
நஞ்சேனும் வேம்பேனும் நன்று.

—ஔவையார் தனிப்பாடல்,

## மாந்தப் பருவங்கள் 10

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | குழவிப் பருவம் | Infancy, babe | 1 | முதல் | 3 | ஆண்டு | வரை |
| 2; | குழந்தைப்பருவம் | Childhood Child. | 4 | ,, | 8 | ,, | ,, |
| 3; | இளந்தை (சிறுவர்) | Lad | 9 | ,, | 12 | ,, | ,, |
| 4; | இளமைப் பருவம் (இளவர்:) | Young | 13 | ,, | 19 | ,, | ,, |
| 5; | இளைமைப் பருவம் (குமரப் பருவம்) (இளைஞர்) | Juvenility | 20 | ,, | 25 | ,, | ,, |
| 6; | வாலைப் பருவம் (வாலையர்) வாலிபர் | Youth | 26 | ,, | 35 | ,, | ,, |
| 7; | ஆள் பருவம் | Person | 36 | ,, | 45 | ,, | ,, |
| 8; | முதுமைப் பருவம் | Old | 46 | ,, | 55 | ,, | ,, |
| 9; | கழிமுதுமை | Very old | 56 | ,, | 65 | ,, | ,, |
| 10; | கிழப் பருவம் | Senility | 65 | ,, | | | |

## பழகுவது!

பறவைகளிடம் அன்போடு பழகுங்கள்; விலங்குகளிடம் அன்போடும் அச்சத்தோடும் பழகுங்கள். மாந்தர்களிடம் (மனிதர்களிடம்) அன்போடும் அச்சத்தோடும் எச்சரிக்கை-யோடும்பழகுங்கள்.

## இருந்தாலும் நாய்' குரைத்தாலும் நாய்!

கல்லாது நீண்ட ஒருவன் உலகத்து
நல்லறி வாளர் இடைப்புக்கு—மெல்ல
இருப்பினும் நாயிருந் தற்றே! இரா அது
இருப்பினும் நாய்குரைத் தற்று!

— நாலடியார்;

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600 005. (தமிழகம்)